


# 03.05.2026 செய்திகள்

## காப்பீட்டுத் துறையில் 100 சதவீத எப்டிஐ அனுமதி

- காப்பீட்டுத் துறையில் அந்நிய நேரடி முதலீட்டு (எப்டிஐ) உச்சவரம்பு 74% ஆக உள்ளது. இதை 100% ஆக உயர்த்த வகை செய்யும் 'சப்கா பீமா சப்கா ரக்ஷா மசோதா 2025' கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் நாடாளும ன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.
- இதற்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் வழங்கியதையடுத்து இது சட்டமாக அங்கீகரிக்கப்பட்டது.
- இதன்படி, காப்பீட்டுத் துறையில் தானியங்கி முறையில் 100% நேரடி வெளிநாட்டு முதலீட்டுக்கு மத்திய அரசு நேற்று அனுமதி வழங்கியது. எனினும், இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி முகமையின் (ஐஆர்டிஏ) ஒப்புதல் மற்றும் சரிபார்ப்புக்கு உட்பட்டு இது செயல்படுத்தப்படும் என மத்திய நிதியமைச்சகம் அறிவித்துள்ளது.
- இதன்மூலம் இத்துறையில் வெளிநாட்டு நிறுவனங்கள் முழு உரிமையைப் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- அதேநேரம், இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் (எல்ஐசி) ஒரு தனி விதியைப் பின்பற்றும். அதன்படி, எல்ஐசி-யில் வெளிநாட்டு முதலீடு தானியங்கி முறையில் 20% ஆக மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளது.

SURESH'

## சீனா-பாகிஸ்தான் பொருளாதார வழித்தட திட்டத்தில் பின்னடைவு

- இத்திட்டத்தின்கீழ், பாகிஸ்தானின் குவாதர் துறைமுகத்தில் இயங்கி வந்த சீன நிறுவனமான ஹாங்கெங், பாகிஸ்தான் மற்றும் சீனாவில் தனது, செயல்பாடுகளை முழுமையாக நிறுத்திக்கொண்டதாக அறிவித்துள்ளது.
- கடந்த 3 மாதங்களாக மின்சாரம், தொழிலாளர் ஊதியம், தாமதக் கட்டணங்கள் எனப் பெரும் நிதி இழப்பைச் சந்தித்த போதிலும் அனுமதி கிடைக்காததால் செயல்பாடுகள் முடங்கியுள்ளதாக நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.
- பாகிஸ்தான் அரசு ஆதரவளித்த போதிலும், அடிப்படை நிலையில் நிலவும் சிக்கல்கள் மற்றும் ஒழுங்குமுறை தடைகள் முதலீட்டுக்கு உகந்த சூழலை அந்நாட்டில் சீர்குலைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரிசர்வ் வங்கியின் புதிய துணை ஆளுநர் நியமனம்

- ரிசர்வ் வங்கியின் புதிய துணை ஆளுநராக ரோஹித் ஜெயினை மத்திய அரசு நியமித்தது.
- ரிசர்வ் வங்கியின் செயல் இயக்குநராகப் பணியாற்றி வந்த ரோஹித் ஜெயின், புதிய பொறுப்பில் 3 ஆண்டுகள் நீடிப்பார். 1934-ஆம் ஆண்டு சட்டத்தின் படி, ரிசர்வ் வங்கிக்கு 4 துணை ஆளுநர்கள் இருக்க வேண்டும். ஜே. சுவாமிநாதன், பூனம் குப்தா, எஸ்.சி.முர்மு ஆகியோர் மற்ற 3 துணை ஆளுநர்களாகப் பணியாற்றி வருகின்றனர்.